விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 4 இதழ் 35
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-3-1994


## தெற்கு தேர்தலின் பின்னர் முக்கிய முடிவுகள்!

(கொழும்பு)
தென்மாகாண சபைத் தேர்தல் முடிவின் பின் முக்கிய அரசியல் முடிவுகளை மேற்கொள்ள அரசு உத்தேசித்திருப்பதாக "சண்டே டைம்ஸ்" தெரிவித்துள்ளது. தேர்தல் ஆண்டாக இது இருப்பதால் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு அரசின் நிலைமையைத் தெளிவுபடுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்க இறு பான்மை மக்களின் தனித் தாயக கோரிக்கையை விரும்பவில்லை இதனால் நாடாளுமன்
(6-ம் பக்கம் பார்க்க)

### தென் மாகாண சபை
## தேர்தலின் பின்
### சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)
வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு தென்மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்தபின் கிழக்கில் நடைபெறுமென ஜனாதிபதி விஜயதுங்கா கூறியுள்ளார்.

தென்பகுதியில் தேர்தல்பிரசார கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

வடக்கே புலிகள் தனிமைப் படுத்தப்பட்டு தோற்கடிக்கப்
(5ம் பக்கம் பார்க்க)

### ★ கிழக்கில் கருத்துக்கணிப்பு வேண்டாம்

# நாடாளுமன்ற வாக்கெடுப்பில்
# வடக்கு - கிழக்கைப் பிரியுங்கள்

## - தினேஷ் கோரிக்கை -

(கொழும்பு)
வடக்கு—கிழக்கை பிரிப்பதற்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதை விடுத்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் அரசியல் அமைப்பைத் திருத்தி இதனை வெற்றிகரமாக நிறைவேற்றலாமென மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.
(6-ம் பக்கம் பார்க்க)

### ஐ. தே. க.விலிருந்து
## காமினி பொன்சேகா
## விரைவில் விலகுவார்?

(கொழும்பு)
உப-சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா ஐ. தே. க. விலிருந்து விலகக்கூடும் என்ற வதந்தி தெற்கில் பரவலாக அடிபடுகிறது.

அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் இவர் போட்டியிட மாட்டார் எனவும் கூறப்படுகிறது. தென்மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம்
(6-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - அதிமுக விடமிருந்து தமிழகத்தை காப்பாற்றுக!
### எதிர்க்கட்சிகள் கோரிக்கையாம்

(சென்னை)
தமிழ்நாட்டை அ. தி. மு. க.விடமிருந்தும், விடுதலைப் புலிகளிடமிருந்தும் காப்பாற்ற மத்திய அரசு உடனடியாகத் தலையிடவேண்டும் என்ற மனுவைத் தமிழகக் காங்கிரஸ் தலைமையில் பல எதிர்க் கட்சிகள் நேற்று தமிழக ஆளுநர் திரு. சென்னா ரெட்டியிடம் கையளித்தனர்.

37 ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பது காரணமாகத் தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அரசைப் பதவி நீக்கும்படி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமாறு
(6ம் பக்கம் பார்க்க)

## தமிழக ஆளுநருக்கு சபையில் அவமதிப்பு

(சென்னை)
தமிழக ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று தமிழக சட்டசபையில் இடம்பெற்ற வரவு செலவுதிட்ட உரையின்போது இதன் பிரதிபலிப்புகள் நன்கு புலப்பட்டன. ஆளுநர் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்துப் பேசுகையில், கடந்த மூன்று ஆண்டுகளாக வரவு
(5-ம்பக்கம் பார்க்க)

## யாழ்.செல்வதற்கு 'தொண்டா' டி.பி.யிடம் அனுமதி கேட்கிறார்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களின் கருத்தினையும், அபிலாஷைகளையும் அரசுக்கு தெரியப்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி விஜய துங்காவை அமைச்சர் தொண்டமான் கேட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக வெடாலவைச் சேர்ந்த இலர் தமக்கு எழுதிய கடிதம்
(6ம் பக்கம் பார்க்க)

### இரகசியப் பொலிஸார்
## தெற்கே விரைவு

(கொழும்பு)
இரகசியப் பொலிசார் பலர் தென் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கள்ளவாக்குகள்போடுவோர் கொலைஞர் குழுக்கள் ஆகியவை அங்கு நிலைகொண்டிருப்பதை அடுத்தே இந்த இரகசியப்பொலிசார் அனுப்பி
(6-ம் பக்கம் பார்க்க)

### கடதாசி கூட்டுத்தாபன
## இயக்குநர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)
வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநரான நல்லதம்பி ஆறுமுகம் என்பவர் அங்கையில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இரைது கொலைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. தமிழ் குழுக்களினுல்
(6-ம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு படையினர்
## தொடர்ந்து சூடு

(எழுதுமட்டுவாள்)
ஆனையிறவு இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை 9-00 மணியளவில் ஒரே துப்பாக்கி வேட்டு சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

நேற்று முன்தினமும் கடுமையான ஷெல் சத்தங்
(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவர் நாளை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து நாளை வெள்ளிக்கிழமை சகல விரிவுரைகளையும் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதுகுறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதன் விபரம் வருமாறு:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ். பல்கலைக்
(5-ம் பக்கம் பார்க்க)

## சீன ஆயுத நிறுவனத்திடம்
### முன்னாள் தளபதி லஞ்சம் பெற்றார்

(கொழும்பு)
சீனாவின் ஆயுதம் தயாரிக்கும் கம்பனியான "நொறிங்கோ" நிறுவனத்தின் ஆயுதக் களஞ்சியம் காலித் துறைமுகத்தில் அமைக்கும் விடயத்தில் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி அந்த ஸ்தாபனத்திடமிருந்து லஞ்சம் பெற்றுள்ளார் என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது: தற்
(6ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். G. V. Kanesalinkam No. 298, K. K. S. Road, Jnffna.

(இ-883)

### பாவித்த, பழைய மணிக்கூடுகளுக்கு புதியன

நல்ல நிலையில் உள்ள பாவித்த மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் உதிரிப்பாகத்திற்காக வாங்கி புதிய மணிக்கூடுகள் குறைந்த விலையில் விற்கப்படும். குறிப்பு: (உதிரிப் பாகத்திற்காக மணிக்கூடுகள் கொண்டு வருபவர்கள் அடையாள அட்டையுடன் வரவும்.) சகல றேடியோக்கள், மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிஸ்கோவாச் அண்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(ஏ-3899)

### வருடாந்த திருவிழா

(பருத்தித்துறை)

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. நாளை 18ம் திகதி திருச்சொரூப சுற்றுப்பவனியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும். மறுநாள் காலை நடைபெறும் திருப்பலிபூசையுடன் திருவிழாக்கள் பூர்த்தியடையும். -52

### பிரிவுபசார விழாவும் விருந்தும்

பேராசிரியர் அ. துரைராஜா துணைவேந்தர்

1994-03-26 மாலை 5.00 மணிக்கு மேற்படி நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்புவோர் பல்கலைக்கழக பதிவாளருடன் 1994-03-18 மாலை 5-00 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் துரைராஜா அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள அறக்கொடைப் புலமைப்பரிசிலுக்கு நிதி வழங்க விரும்புவோர் அதற்கான நிதியை பதிவாளருக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள்விடுகின்றேன்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
1994-03-11. (எ 3900)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


# ★ கொழும்பில் இயங்கும் சித்திரவதைக் கூடத்திற்கு அரச படையினரே பொறுப்பு

(கொழும்பு)

இராணுவம் பாதுகாப்புப் படையின் சில பிரிவுகள் கொழும்பில் சில ரகசிய இடங்களில் சித்திரவதை முகாம்களை வைத்து நடாத்துவதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதமேந்திய குழுக்களால் கைதுசெய்யப்படும் தமிழர்கள் சட்டபூர்வமான நிலையில் வைத்திருக்கப்படாது இத்தகைய இடங்களில் வைத்து விசாரிக்கப்படுவதாகவும் புலிகளுடன் தமக்கு தொடர்பு இருப்பதாக ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் யார் என்பது தம்மை இனங்காட்டிக்கொள்வதில்லை எனக் குறிப்பிடும் மன்னிப்புச்சபை அறிக்கை இவற்றுக்கு அரச படைகளே காரணமாக இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் அமெரிக்கத் தகவல் தொடர்பு நிலையத்திற்கும் பின்னால் உள்ள ஒரு ரகசிய முகாம் ஒன்றில் பல தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர சில நடவடிக்கைகள் இராணுவ உளவுப்பிரிவுத் தலைவரின் கீழ் இயங்கும் விசேட நடவடிக்கைப் பிரிவினால் (இதற்கு நேரடியாக தேசிய புலனாய்வுத்துறையுடன் தொடர்பிருக்கிறது) நடாத்தப்படுகின்றதாகவும் இப்பிரிவு கொழும்பில் பொலிஸ் ஒத்துழைப்புடன் இயங்கி வருவதாகவும் தெரியவருகிறது. இவற்றில் அமைச்சு வகிக்கும் சிலர் புளொட் உறுப்பினர்கள் எனவும் இவர்கள் ருகுணு புனைவிரத நிலையத்திற்கு அருகில் வவசல என்னும் இடத்தில் ஒரு வீட்டை தமது அலுவலகமாக உபயோகிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

அரசாங்கம் இத்தகைய இரகசிய தடுப்புக்காவல்களில் தமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் இத்தகைய சட்டவிரோத கைதுகளை செய்பவை தமிழ்க்குழுக்களே எனவும் கூறுகின்றது. ஆனால் இராணுவ பாதுகாப்புச் செயலாளரே தமக்கு புலிகளை அடையாளம் காட்டுவதில் மட்டுமே இக்குழுவினர் உதவி வருகின்றார்கள் எனக் கூறுகின்றார் என்று மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. —ப

## பொதுக்கூட்டம்

(வேலணை)

உலகத் தமிழர்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இலங்கைக் கிளையின் செயலாளரான திரு. சி. ஆறுமுகசாமி செய்து வருகின்றார். -75

# சபாநாயகரின் யாழ். விஜயம் டி. பி. யின் கூற்றை பலவீனமாக்கும்

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமதுவின் யாழ். விஜயமானது யாழ். குடாவின் தற்போதைய நிலைமையை நேரடியாக அவதானித்து அதனை அவர் வாயினாலேயே வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக சபாநாயகரின் யாழ். விஜயத்தை விடுதலைப் புலிகள் நோக்கக்கூடும் என கொழும்பு அரசியல்வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:- விடுதலைப்புலிகளை தேடி சபாநாயகரே பேச்சுவார்த்தைக்கு செல்வதானால் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என ஜனாதிபதி வர்ணிக்கும் கூற்றும் பலவீனமடையும். ஏனெனில் அரசாங்கத்தின் பிரதிநிதியான சபாநாயகர் பயங்கரவாதிகளோடு பேச்சுவார்த்தை நடாத்த செல்கிறார் என ஒரு அரசாங்கத்தினால் கூறமுடியாது.

சபாநாயகர் மட்டுமல்ல யார் வேண்டுமானாலும் சமாதான முயற்சிகளில் ஈடுபடலாம் என அரசாங்கம் கூறக்கூடும்.

எனினும் விடுதலைப்புலிகளை தேடி சபாநாயகர் செல்வது என்பது விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் அரசியல் ரீதியில் அவர்களின் பலத்தை அதிகரிக்கவே செய்யும்.

எனினும் இனப்பிரச்சினை தீர்வுக்கான இறுதி முடிவு சபாநாயகரின் கரங்களில் இல்லையென்றும் அரச தரப்பினர் முழுமையான ஒத்துழைப்பு இல்லாத நிலையில் சபாநாயகர் மேற்கொள்ளும் யாழ். விஜயமானது ஏற்கனவே மத அமைப்புக்கள் மற்றும் சர்வோதய தலைவர் ஆகியோர் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் போலவே அமையும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். -உ-ஓ

# தென்மாகாணசபைதேர்தலில் முறைகேடுகள் இடம் பெறும்

## ஐக்கிய முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

பாரியளவிலான தேர்தல் முறைகேடுகளை, தென்மாகாணசபைத் தேர்தலில் பிரயோகிக்க அரசு முயற்சிப்பதாக பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

உண்மையான வாக்குச்சீட்டுகளுக்குப் பதிலாக 'டூப்ளிகேற்' வாக்குச் சீட்டுகளை அச்சடித்துவிட முயல்வதோடு, மக்கள் முன்னணி ஆதரவாளர்களை தேர்தலுக்கு முன் கைதுசெய்து காவலில் வைக்கவும் ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இப்படியான சதிவேலைகளை அரசு நிறுத்தாவிடின் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் நிலை தோன்றும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் காரியதரிசி டி. எம். எம் ஜயரட்ண தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் இப்படியான விடயங்கள் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில்; இறக்குவானை மாகாணத்தில் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆயுதம் தாங்கிய ஐ. தே. க. வினர் பொலிசாரின் உதவியுடன் தேர்தல் நிலையங்களுக்குள் சென்று பலாத்காரமாக வாக்குகளை போட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் மாகாணசபைத் தேர்தலை நேர்மையாகவும் நீதியாகவும் நடத்த ஆவன செய்யவேண்டும். இல்லையேல் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே-சி


## இன்று — V

சுழிபுரம் — பறளாய்

### முருகன் தேவஸ்தானத்தில்.....

∴ தமிழ் மக்களின் துன்பங்களை நீக்கி
∴ அபிலாஷைகளை நிறைவேற்றிட
∴ கந்தன் அருள் வேண்டி

## விடி விளக்குகள் 108

இன்று (17-03-1994)

முருகப்பெருமானின் இலட்சார்ச்சனை தினத்தில் கார்த்திகைத்திருவிழா முடிவுற்றதும் ஆறுமுகப்பெருமானுக்கு இரவு 7-00 மணியளவில்

★ விடிவிளக்குகள் - 108 ★

ஏற்றிவைக்கப்படும்.

★ இத்தினத்தில் அடியார்கள் அனைவரும் வருகை தந்து கந்தனின் அருளை வேண்டி ஏகும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பு:

★ பறளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில் நேற்றைய பங்குனி சதுர்த்தி விழாவின்போது மேற்படி வேண்டுதலைப் பிரார்த்தனையாகக் கொண்டு பஞ்சமுக விநாயகப்பெருமானுக்கு விடி விளக்குகள் 108 ஏற்றிவைக்கப்பட்டது.

சோழியூரான்,
பிறைகுடிக்குரு,
அமைப்பாளர்.

(இ-892)


## திருமணத்தை மறுக்கும் அமைச்சர் 'அநுரா'

(கொழும்பு)

திருமணம் செய்ய தான் விரும்பவில்லை என உயர்கல்வி அமைச்சர் திரு. அநுரா பண்டாரநாயக்கா 'சண்டே ரைம்ஸ்' சுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; திருமணம் செய்வது பற்றி நான் நினைக்கவில்லை தற்போது எனக்குள்ள பிரச்சினைகளே போதுமானதாயுள்ளது, எனது வாழ்க்கையில் பெருமளவு பிரச்சினைகள் பெண்களால் தான் ஏற்பட்டது எனவும் கூறினார்.

இவரது சகோதரி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதும் தெரிந்ததே. —வி

## காய்ச்சலினால் மரணம்

(எழுதுமட்டுவாள்)

பளைப்பகுதியில் பரவிவரும் வயிற்றோட்டம் காய்ச்சலினால் வயோதிபர்கள் குழந்தைகள் பாதிப்பு அடைந்து வருகின்றனர்.

இந்திரா புரத்தைச்சேர்ந்த சு. ஆறுமுகம் (வயது 65) காய்ச்சலினாலும் வயிற்றோட்டத்தினாலும் பளை வைத்தியசாலையில் அண்மையில் மரணமானார். -170

## 21 காவலர் வேலைநீக்கம்

(சென்னை)

திருச்சி அகதிமுகாமிலிருந்து கடந்த 11ம் திகதி தப்பிச் சென்ற மூன்று இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக 21 காவலர்களும், துணை ஆய்வாளர் ஒருவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக, சென்னை பொலிஸ் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த மூன்று தமிழ் அகதிகளும், 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் கைதுசெய்யப்பட்டுவிட்டனர். (வி-சி)

# சமாதான நல்லெண்ண முயற்சிகளில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை

(கொழும்பு)

பேச்சு வார்த்தைகளுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் வடபகுதிசென்று வருபவர்கள் போவதும் திரும்புவதுமாகவே இருக்கின்றனர். ஆனாலும் அவர்களது நல்லெண்ண முயற்சிகளை பயன்படுத்திக்கொள்வதில் அரசு அக்கறை காட்டுவதாகவே தோன்றவில்லையென்று கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

நல்லெண்ண முயற்சிகளை மேற்கொண்டு வடபகுதி சென்றவர்கள் அனைவருமே சமாதானத்திற்கான சூழ்நிலைகள் நிலவுவதைச் சுட்டிக்காட்டியுள்ளபோதிலும் இந்த நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக்கொள்வதில் அக்கறையின்றியே அரசாங்கம் இருந்து வருகிறது.

இருபகுதி மக்களும் சமாதானத்தையே கோரும்போது சமாதானத்திற்கான சூழ்நிலைகளும் உள்ளபோது இவற்றை பயன்படுத்திக் கொள்ள அரசு பின்நிற்பது சமாதானத்தில் அரசுக்கு அக்கறையில்லை என்பதையே சுட்டிக்காட்டுவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியிலான சமாதான முயற்சிகள் எதனையும் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பதில் அரசு உறுதியாக வுள்ளது எனவே பேச்சு வார்த்தை ஒன்றிலோ அல்லது சமாதானத் தீர்வு ஒன்றிலோ அரசு உண்மையாகவே அக்கறை கொண்டிருந்தால் அதற்கான முன் முயற்சிகளை அவர்கள் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

ஆனால் இதற்கு எதிர்மாறாக வடக்குக் கிழக்கு மாகாணங்களை பிளவுபடுத்துவதற்கான சர்வஜன வாக்கெடுப்பைக் கிழக்கு மாகாணத்தில் நடத்தும் முயற்சிகளிலேயே அரசு மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகிறது கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து பிளவுபடுத்துவது இனப்பிரச்சினைக்கு தீர்வு எதனையும் கொண்டு வரப் போவதில்லை. தமிழர்களைப் பலவீனப்படுத்தி கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் நோக்குடனேயே இம்மாகாணங்களையும் பிளவுபடுத்த சிங்களக் கட்சிகள் விரும்புகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## ஆலயத்தில் சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆதிப் புலம் அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவ, மாணவிகள் ஆலய வீதிகள், பூந்தோட்டம் ஆகியவற்றை கடந்த 14-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வித்தியாலய அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் சிரமதானப் பணி மூலம் செப்பனிட்டு வருகின்றனர். (154)

## நாடளாவிய ரீதியில் கிராமோதயப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கிராமோதய சபையினால் நடாத்தப்படும் 12வது நாடளாவிய ரீதியிலான கிராமோதய மன்றப் போட்டி 1993/94 வெகு விரைவில் நடாத்தப் படவிருக்கிறது.

01-07-93 தொடக்கம் 15-03-94 வரையான காலப் பகுதியில் கிராமோதய மன்றங்களினால் மேற்கொள்ளப் பட்ட பணிகள் இப்போட்டியில் மதிப்பீடு செய்யப்படும். 12வது சுற்று பிரதேச செயலாளர் பிரிவில் கிராமோதய மன்றங்களுக்கிடையில் இடம் பெறும். 1வது பரிசு - 3,500/ 2வது பரிசு 2000/- 3வது பரிசு 1500/-4வது பரிசு 1000/-.

2வது சுற்று அந்தந்த நிர்வாக மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெறும். 1வது பரிசு 7,000/- 2வது பரிசு 3000/- 3வது பரிசு 2000/. 4, 5, 6வது பரிசுகள் தலா 1000- ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

மூன்றாவது சுற்று அகில இலங்கை ரீதியில் நடைபெறும். 1 தொடக்கம் 10 வரையான இடங்களுக்குப் பரிசு வழங்கப்படும். பரிசுத்தொகை 1வது பரிசு 3 லட்சம் ரூபா, 2வது பரிசு 2 லட்சம் ரூபா 3வது பரிசு 1 லட்சம் ரூபா 4 முதல் 10 வரையான பரிசுகள் ஒவ்வொன்றும் 50,000/- பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும். - 161-ஜ

## அஞ்சல் இணைக்கள பரீட்சை விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சை, நுண்ணாய்வு பரிசோதகர் / அஞ்சல் கணக்குப் பரிசோதகர் தெரிவுக்கான போட்டிப்பரீட்சை, உதவி அஞ்சல் கணக்குப் பரிசோதகர்கள் தெரிவுக்கான பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு தகுதியுடைய விரும்பும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அஞ்சல் அதிபர்களுக்கான பொறுப்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் நாளை 18-ம் திகதி எனவும் மற்றைய இரு பரீட்சைகளுக்கான விண்ணப்ப இறுதித்திகதி 21ம் திகதி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது மேற்படி பரீட்சைகளுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக தமது விண்ணப்பங்களை பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வடமாகாணம், அவர்களுக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றனர் -ரி

## வில்லிசை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராமகிருஷ்ணலய மாணவிகள் வழங்கும் "வீரத்துறவி" சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை சரிதம் வில்லிசை நிகழ்ச்சி நாளை 18ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி எஸ். ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## 225 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அவதி

(தாளையடி)

கட்டைக்காடு- வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி கேவில், போக்கறுப்பு கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 225 குடும்பங்கள் தொடுவாய் வாய்க்கால், பூனைத்தொடுவாய், மண்டிக்குளம் பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

இப்பகுதிகளிலுள்ள பிள்ளைகளுக்கென சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய் கிராமங்களில் இரு பாடசாலைகள் இயங்குகின்றன பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முதிரைகளோ, பாடசாலைப் புத்தகங்களோ, உபகரணங்களோ, சீருடைகளோ இல்லாத நிலையில் சுமார் 235 பிள்ளைகள் 5ம் வகுப்புவரை கல்வி பயில்கின்றனர்.

இப்பாடசாலைகளில் நிரந்தர ஆசிரியர் எவரும் இல்லாத நிலையில் கல்வி வசதியற்ற ஆசிரியர்களும், க.பொ.த. (சாதாரண) தர தொண்டர் ஆசிரியர்களும் தான் கல்வி போதிக்கின்றனர்.

இப்பாடசாலைகளுக்கு அரசசார்பற்ற எந்த நிறுவனங்களின் உதவியும் கடந்த இருவருடங்களாக கிடைக்கவில்லை. -163-ஜ

## மாணவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள்

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறை கோட்ட பாடசாலைகளில் பயிலும் கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலையும் கண் வைத்திய நிபுணரால் வழங்கப்பட்ட பரிசோதனையையும் அதன் நிழற்படப் பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்குமாறு கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். அரசுசுவீதியில் இயங்கிவரும் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தினமும் இரவில் மாணவர்கள் பெற்றோமாக்ஸ் வெளிச்ச வசதியுடன் கல்விகற்று வருகின்றனர். பெற்றோரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பிரஸ்தாப பெற்றோமாக்ஸ் சிற்காவ மண்ணெண்ணெய் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவக கோட்டத்தினரால் வாரந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. 101-ர

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக்கல்லூரியிலுள்ள கட்டிடம் ஒன்றில் தற்காலிகமாக செயற்பட்டு வந்த சண்டிலிப்பாய் (வலிமேற்கு) கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் சண்டிலிப்பாய்-சித்தங்கேணி வீதியிலுள்ள மாடிக்கட்டிடம் ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. -71

திருவருள்பதியான் துணை

கோண்டாவில் — தில்லையம்பதி

அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் — [ 1994 ]

## பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனையும் விசேட திரவ்விய ஹோமமும்



17-03-94 முதல் 26-3-94 வரை

★ தினமும் மாலை 4 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் தொடர்ந்து இலட்ச அர்ச்சனையும் நடைபெறும்.

★ (26-3-94) சனிக்கிழமை காலை இலட்ச அர்ச்சனை பூர்த்தியும் 64 உபசார வழிபாடும் நடைபெறும்.

★ (27-3-94) ஞாயிறு காலை பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர **1008 சங்காபிஷேகமும்** மதியம் மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) மாலை பௌர்ணமி திருவிளக்குப் பூசையும், திருவூஞ்சலும் தொடர்ந்து விநாயகப்பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வயானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான் பூந்தண்டிகையில் தெருவீதி உலா வருதலும் நடைபெறும்.

★ கிரியைகளை நடத்துபவர் : சிவஸ்ரீ சி. ஆறுமுகக்குருக்கள்.

★ இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை சமயச் சொற்பொழிவு.

நிகழ்த்துபவர் : "சிவநெறித்தொண்டன்" செ. சத்தியமூர்த்தி அவர்கள்.

தில்லையம்பதி,

16 - 3 - 94.

பரிபாலன சபை.

(சி-891)

## தொப்பிகள் எடுத்துவர அனுமதி மறுப்பு!

(மானிப்பாய்)

வியாபார நோக்கத்திற்காக கொழும்பிலிருந்து வடபகுதிக்கு கொண்டு செல்வதற்காக எடுத்து வரப்பட்ட பலரது தொப்பிகள் வவுனியா தடை முகாமில் படையினரால் சில தினங்களுக்கு முன்னர் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் எடுத்து வரப்பட்ட சிறு பிள்ளைகளின் பாதணி வகைகளும் படையினரால் பிரித்துப் பார்க்கப்பட்ட பின்னர் மேற்கொண்டு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (71)

## உண்மையுள்ள சமூகத்தை கட்டியெழுப்பவேண்டும்

(சாவகச்சேரி)

"உண்மையும் நேர்மையும், நீதியும் உள்ள சமுதாயத்தை நாம் கட்டியெழுப்பவேண்டும்" இவ்வாறு யாழ். வை. எம். சீ. ஏ. தலைவர் டாக்டர் து. வி. ஜெயகுலராஜா தெரிவித்தார்.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உதவித்திட்டத்தின்கீழ் தென்மராட்சிப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் குடும்பங்களுக்கு வை. எம். சீ. ஏ. யின் உதவியுடன் அறவழிப்போராட்டக்குழு நடாத்தியளிக்கும் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் "அரச மனித நேயமற்ற நாகரீகமற்ற தாக்குதல்களை எமது மக்கள்மீது நடாத்திக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் நாம் இருளில் ஒளி யேற்ற வேண்டும் என்றும் கூறினார். -ர

